திரு. ப. ந. ராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல முறை அரைத்த மாவையே அரைப்பது போல் நான் இதைச் சொல்வது எங்கள் மாவட்டத்தினுடைய தலையாய கடமையாகும். இன்றைய தினம் விவசாயிகள் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் அந்த வறட்சி பற்றிய விவர குறிப்புகளின் தகவலை பெற்று வரி வஜா செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தாங்கள் பேசும்போது மிகவும் மன வருத்தத்தோடு எனக்கு யாருமே பாதுகாப்பு இல்லை, துணையாக வரவில்லை என்று சொன்னீர்கள். நாங்கள் எல்லாம் இருக்கிறோம். உங்களை என்ன செய்ய முடியும் ?

*திரு. எப். எம். இராசரத்தினம் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை வரலாறு காணாத மிகப்பெரிய வறட்சி இருக்கிறது. அணையிலே தண்ணீர் இல்லை. விவசாய பெருங்குடி மக்கள் விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த பிரச்சனையை மனதிலே கொண்டு அமைச்சர் அவர்கள் நல்ல தீர்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(ஒ) அரசு அனுமதியின்றி நடைபெறும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் குறித்து:

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஊர்களில் அரசு அனுமதி பெறாமல் ஆசிரியர் பயிற்சி பள்ளி நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அது சம்பந்தமாக நேற்றைய தினம், சுப்ரீம் கோர்ட் அனுமதி பெறாமல் ஆசிரியர் பயிற்சி பள்ளி நடத்தக் கூடாது என்று ஆணை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி ஆணை இருக்கும்போது தமிழகத்திலே சில இடங்களில் ஆணை பெறாமல் ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு அரசு என்ன திட்டம் உருவாக்கியிருக்கிறது.

3. அறிவிப்புகள்.

*(ஆ) பொதுக்கணக்குக் குழு-உறுப்பினர்கள் தேர்தல்.

மாணபுமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986–87ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்குக் கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. செ. ஆறுமுகம்
2. திரு. மு. இராமநாதன்

3. திரு உ. சுப்பிரமணியன்
4. திரு டி. வெங்கடரெட்டி
5. திருமதி ஏ. எல். பொன்னம்மாள்
6. திரு எஸ். சிவராமன்
7. திரு எஸ். இராசாராமன்
8. திரு எப். எம். இராசரத்தினம்
9. திரு சி. சுப்புராயர்
10. திரு மா. சின்னராசு
11. டாக்டர் கே. பி. இராமலிங்கம்
12. திருமதி இரா. சரோஜா
13. திரு கே. உச்சி
14. திரு கூடலூர் இ. வீ. வேலு
15. திரு ப. ந. இராமச்சந்திரன்
16. திரு ஆ. கா. அ. அப்துல் சமத்.

நியமனம் செய்யப்பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1986–87 ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 230 ஆவது விதியின் கீழ் மாண்புமிகு திரு உ. சுப்பிரமணியன், எதிர்கட்சித் தலைவர் அவர்களை, இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு-உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1986–87 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு சு. பாலன்
2. திரு அ. மலர்மன்னன்